**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**
•••••••

புதுச்சேரி, 09.08.2021

**செய்திக் குறிப்பு**

**அரசு மேனிலைப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்புக்கான மாணவர் சேர்க்கை**

2021-22 ஆம் கல்வி ஆண்டில் புதுச்சேரி பகுதியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் பதினோராம் வகுப்பிற்கான பள்ளி அளவிலான சேர்க்கைகள் முடிவுற்றது. அதன் தொடர்ச்சியாக அரசு மேனிலைப் பள்ளிகளில் மீதமுள்ள இடங்களை மையப்படுத்தப்பட்ட கலந்தாய்வின் மூலம் நிரப்ப பள்ளிக் கல்வி இயக்ககத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு மேனிலைப் பள்ளிகளுக்கு பதினொன்றாம் வகுப்பு சேர்க்கைக்காக விண்ணப்பித்து இடம் கிடைக்கப்பெறாதவர்களும், இதுவரை எந்தவொரு பள்ளியிலும் சேராத மாணவ மாணவியர்களுக்கும் இறுதி வாய்ப்பாக கலந்தாய்வு நடத்தி பதினோராம் வகுப்பில் சேர்க்கை ஆணை வழங்கப்பட உள்ளது. எனவே அரசு பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பில் சேர்வதற்காக மாணவ, மாணவியர் தங்களது அசல் / இணையதள மதிப்பெண் சான்றிதழ் நகல், ( Original / Provisional Marksheet), மாற்றுச் சான்றிதழ் (T.C), குடியிருப்பு (Residence), நிரந்தர ஒருங்கிணைந்த சான்றிதழ் அல்லது இட ஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் நகல்கள் (PIC /Caste certificate) ஆகியவற்றுடன் பின்வரும் அட்டவணைப்படி **காராமணிக்குப்பம், ஜீவானந்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில்** எதிர்வரும் **12.08.2021** மற்றும் **13.08.2021** ஆகிய தேதிகளில் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். புதுச்சேரி குடியிருப்பு பெறாத மாணவர்கள் 13.08.2021 அன்று மதியம் 2.30 மணிக்கு கலந்தாய்வுக்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தகவல்கள்**

| மதிப்பெண் | நாள் | நேரம் |
|---|---|---|
| 499 முதல் 200 வரை | 12.08.2021 | 10:00 AM – 1.00 PM |
| 199 முதல் 180 வரை | 12.08.2021 | 02:30 PM – 5.30 PM |
| 179 முதல் 175 வரை | 13.08.2021 | 10:00 AM – 1.00 PM |
| புதுச்சேரி குடியிருப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் | 13.08.2021 | 02:30 PM – 5.30 PM |

(முனைவர். அ. மைக்கேல் பென்னோ)
பள்ளிக் கல்வி இணை இயக்குநர்

இச்செய்திக்குறிப்பினை தங்கள் நாளேட்டில் / வானொலியில் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு அன்போடு வேண்டுகிறேன்.

(முனைவர். அ. மைக்கேல் பென்னோ)
பள்ளிக் கல்வி இணை இயக்குநர்

Scanned by CamScanner